தமிழ்நாடு மாணவர்களின்

# கற்றல் தரக் குறியீட்டை உயர்த்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் — எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 15 –

திராவிட முன்னேற்றக் கழக, மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் 12 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் தமிழ்நாடு மாணவர்களின் கற்றல் தரக் குறியீட்டை உயர்த்திட ஒன்றிய அரசின் பள்ளிக் கல்வித் துறை ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும் ஆரம்ப நிலை கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தவும், மனித வள மேம்பாடு குறித்தும் ஏதேனும் செய்ய இயலுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் போட்டித் தேர்வுகளில் கற்றல் தரம் குறைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் ஜெந்த் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

பல்வேறு மாநிலங்களின் பள்ளிக் கல்வித் தரத்தை ஒப்பிடுவதற்கென ஒன்றிய அரசு 70 காரணிகள் அடங்கிய கற்றல் தரக் குறியீட்டு அறிக்கை ஒன்றை உருவாக்கியுள்ளது என்றும் பள்ளிக் கல்வித் துறை இணைய செயலி மூலம் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய முயற்சி களை எடுத்து வருகின்றன என்றும், தமிழக மாணவர்களின் கற்றல் குறியீட்டுத் தரம் கடந்த 2025–26ஆம் கல்வியாண்டில் 628 புள்ளிகளாக உயர்ந்துள்ளது என்றும், ஆசிரியர்களுக்கான பயிற்சி புத்தகங்களின் தரம், மொழி அறிவு, கணித கற்றல் பல்வேறு மாநிலங்களில் பின்பற்ற ப்பபடும் சிறந்த அணுகு முறைகள் ஆகியன குறித்தும் இந்த அறிக்கையில் விவரமாக தரப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் ஒன்றிய அரசின் திட்டங்களான சமக்ரா, சிக்ஷா, கஸ்தூரிபாய் காந்தி குழந்தைகள் பள்ளிகள், நேதாஜி சுபாஷ் சந்திரா பள்ளிகள் ஆகியவற்றின் மூலம் மாநிலங்களுக்கு தேவையான நிதி உதவிகளை ஒன்றிய அரசு தந்து வருகிறது என்றும், உண்டு உறைவிடப் பள்ளிகளை உருவாக்குதல், தொழிற் கல்வியில் பயிற்சி அளித்தல், கணிணிமயமாக்குவதற்கான நிதியுதவி அளித்தல், இலவச புத்தகங்கள் வழங்குதல் இலவச சீருடை அளித்தல் போன்றவற்றில் மாநில அரசுகளுக்கு, ஒன்றிய அரசு நிதியுதவி அளித்து வருகிறது என்றும், தேசிய கல்விக் கொள்கை 2020ன் படி எழுத்தறிவு, எண்களின் அறிவு, திறன் மேம்பாட்டு, தொழிற் கல்வி வேலை வாய்ப்பினை உருவாக்கும் பயிற்சிகள் என்று அனைத்து துறைகளிலும் மாணவர்களை தயார்படுத்த ஒன்றிய அரசு அனைத்து உதவிகளையும் நல்கி வருகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதில் அளித்தார்.



திருப்பூர் பல்லடம் முத்தூர் IDPL திட்டத்தில் விவசாய நிலங்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்று வழித்தடங்களை ஆய்வு செய்யக் கோரியும், மேலும் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு 100% சந்தை மதிப்பு இழப்பீடு வழங்கவும், விவசாயிகள்–அதிகாரிகள் இணைந்து கள ஆய்வு மேற்கொள்ள வலியுறுத்தி கோரிக்கை மனுவினை துணை குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச் செல்வன் (தேனி), கே.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), முனைவை கணபதி ப.ராஜ்குமார் (கோவை), முரசொலி (துஞ்சாவூர்), மாதேஸ்வரன் ( நாமக்கல்) ஆகியோர் உள்ளனர்.

திருவண்ணாமலை நகருக்கு

# ரயில் சேவைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் — சி.என்.அண்ணாதுரை கேள்வி!



*புதுடெல்லி, ஆக.15 -*

*திருவண்ணாமலை நகருக்கு ரயில் சேவைகளை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் திருவண்ணாமலை தொகுதிக் கழக உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.*

*அவரது கேள்விகள் வருமாறு:-*

*15 ஆண்டுகளுக்கும் மேலாகியும், இந்தியாவின் முக்கியமான புனிதத் தலமாகவும் ஆன்மிகத் தலமாகவும், தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய மாவட்டமாகவும் விளங்கும் திருவண்ணாமலைக்கு, சென்னை, கோயம்புத்தூர், பெங்களூரு மற்றும் புதுச்சேரி ஆகிய நகரங்களிலிருந்து அத்தியாவசியமான தினசரி ரயில் சேவைகள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறு இருப்பின், அதன் விவரங்கள் என்ன?*

*(b) சென்னை-திருவண்ணாமலை ரயில் சேவையை தாம்பரம், திண்டிவனம் மற்றும் விழுப்புரம் வழியாக மீண்டும் தொடங்குவதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? இச்சேவை இப்பகுதி மக்களுக்கும் திருவண்ணாமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கும் மிகவும் அவசியமானதாகும்.*

*(c) தற்போது இயங்கி வரும் 66064 புதுச்சேரி- விழுப்புரம் MEMU ரயிலை திருவண்ணாமலை வரை நீட்டிக்கவும், மேலும் திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருவுக்கு புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை இயக்கவும் அரசு முன்மொழிகிறதா? இதன் மூலம் இந்நகரங்களுடன் அத்தியாவசியமான தினசரி ரயில் இணைப்பு முதன்முறையாக ஏற்படுத்தப்படுமா?*

*(d) அவ்வாறு இருப்பின், மேற்கண்ட முன்மொழிவுகளின் தற்போதைய நிலை உள்ளிட்ட முழுமையான விவரங்கள் என்ன?*

*(e) நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்த ரயில் இணைப்பு குறைபாடுகளைச் சரிசெய்வதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன?*

*இவ்வாறு சி.என். அண்ணாதுரை கேள்விகள் கேட்டிருந்தார்.*

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில் -

# கர்ப்பிணிப் பெண்களுக்குப் பரிசுப் பெட்டகங்கள்!

## முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் நாளை வழங்குகிறார்!

*திருவண்ணாமலை, ஆக. 15*

*திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. இம்மாத விழாவில் முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்கள் கலந்து கொண்டு, பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.*

*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த 2025 ஜுலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.*

*16.08.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.*

*விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.*

*அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ. ஒ.பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.*

*விழாவில் கலந்து கொண்டு முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான சி.வெ. கணேசன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்களப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.*

*மருத்துவ ஆலோசனைகளை, மகப்பேறு மருத்துவர் டாக்டர் கவிதா வழங்குகிறார்.*

*நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்தி வேல் மாறன் நன்றி கூறுகிறார்.*

*விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இல.குண சேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.*

ஆவின் பாலைத் தொடர்ந்து

# ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தட்டுப்பாடு!

*சென்னை, ஆக.15-*

*ஆவின் பாலைத்தொடர்ந்து ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தமிழ்நாட்டில் கட்டுப்பாடு நிலவுகிறது. ஆவின் பாலகங்களுக்கு ஒரு நாளைக்கு 20 முதல் 30 லிட்டர் நெய் மட்டுமே விநியோகம் செய்யப்படுவதால் பொதுமக்கள் சிரமம் அடைந்துள்ளனர்.*

*தமிழ்நாட்டில் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகளை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், பாலைத் தொடர்ந்து ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தமிழ்நாட்டில் கட்டுப்பாடு நிலவுகிறது. 5 லிட்டர் ஆவின் நெய் டப்பா கடந்த 7 மாதங்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, ஒரு லிட்டர் நெய் டப்பாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதே போன்று, ஒரு லிட்டர் நெய் பாக்கெட்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பாலின் அளவு குறைந்தாலே பால் சம்பந்தப்பட்ட பொருட்களின் உற்பத்தி தானாக குறைந்து விடும். இதன் காரணமாக தான், ஆவின் நெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.*

தேசிய நெடுஞ்சாலை விபத்துகளில்

# இறந்த விலங்குகளின் உடல்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி கேள்வி!



புதுடெல்லி, ஆக.15-

தேசிய நெடுஞ்சாலைகளில் (NHs) வனவிலங்குகள் மற்றும் கைவிடப்பட்ட விலங்குகளின் நடமாட்டத்தால் விபத்துகள் ஏற்பட்டு, அதனால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் அகால மரணம் நிகழ்கிறதா அவ்வாறெ னில், இத்தகைய விலங்கு களின் நடமாட்டத்தால் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளின் விவரங்கள் என்ன?

இத்தகைய விலங்கு களின் உடல்கள் தேசிய நெடுஞ்சாலைகளிலேயே கிடக்கின்றனவா? அவற்றின் உடல் பாகங்கள் சாலைகளில் சிதறிக் கிடக்கின்றனவா? அல்லது வாகனங்களுக்கு அடியில் நசுக்கப்படுகின்றனவா? அவ்வா றெனில், தேசிய நெடுஞ்சாலைகளிலிருந்து இத்தகைய விலங்கு களின் உடல்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

இதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை ஒன்றிய அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி அளித்த பதில் வருமாறு :

31.07.2026 அன்று EDAR இணையதளத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் விலங்குகள் சம்பந்தப்பட்ட மொத்தம் 1,055 விபத்துகள் பதிவாகியுள்ளன, இவற்றால் 435 மனிதர்களும் 1,938 விலங்குகளும் உயிரிழந்துள்ளன. விபத்துகளில் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புடைய விலங்கு களின் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து வடிவமைப்பு விவரங்களின் பாதுகாப்புத் தணிக்கையை உறுதி செய்வதற்கான வழிமுறைகள், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், உகந்த அளவிலான சேவையை பராமரிக்கும் வகையில், இத்தகைய விலங்குகளின் உடல்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றுமாறும் ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து ஓட்டத்தைப் பராமரிக்க விலங்குகளின் உடல்கள் உடனடியாக அகற்றப்படுகின்றன. வனவிலங்குகள் சம்பந்தப்பட்ட நிகழ்வு களில், சம்பந்தப்பட்ட மாநில வனத்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, சட்டரீதியான நடை முறைகளுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகளுக்காக அந்த விலங்குகள் அல்லது அவற்றின் உடல்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) செயல்பாட்டு வரம்பிற்குள் 'சம்பவ' (Incident Management Teams) அமைக்கப்பட்டுள்ளதன் மூலம், நெடுஞ்சாலையில் உள்ள விலங்குகள் அல்லது விலங்குகளின் உடலங்களை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, இதன் வாயிலாகப் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படுகிறது. மேலும், இக்குழுக்கள் காயமடைந்த விலங்குகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதோடு, அவற்றுக்குச் சிகிச்சையளிக்கவும் மேலதிகப் பராமரிப்பு வழங்கவும் உரிய அதிகாரிகளிடம் அவற்றை ஒப்படைக்கும் பணிகளையும் மேற்கொள்கின்றன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கூறினார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்**

**ஆகஸ்ட் 15 (1980)**



தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கேஎஸ்எம். மணிமுத்து**

**ஆகஸ்ட் 15 (2024)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

சிவகங்கை நகர்மன்ற துணைத் தலைவராகவும், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்காக குரல் கொடுத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**